DINAMALAR 02-02-2012

# பிரேசில் நாட்டில் தயாராகிறது மெட்ரோ ரயில் பெட்டிகள்

## டிசம்பருக்குள் சென்னை கொண்டு வரத் திட்டம்

- வீ.சக்கரபாணி -

மெட்ரோ ரயிலில் பயன்படுத்தும் குளிர்சாதன பெட்டிகள், பிரேசில் நாட்டில் தயாராகிவருகிறது. இவை வரும் டிசம்பர் மாதம் சென்னை வருகின்றன.

சென்னை வண்ணாரப்பேட்டை - விமான நிலையம், சென்ட்ரல் - பரங்கிமலை இடையே 45 கி.மீ., துாரத்துக்கு மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இத்திட்டத்திற்கு ரயில் பெட்டிகள் தயாரிக்க பிரான்ஸ் நாட்டில் உள்ள 'ஆல்ஸ்டாம் டிரான்ஸ்போர்ட் எஸ்.ஏ.,' என்ற நிறுவனத்துடன் 1471.39 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

### பிரேசிலில் தயாரிப்பு

இந்த நிறுவனம் ரயில் பெட்டிகள் வடிவமைப்பு, பெட்டிகள் தயாரித்து அளித்தல்,சோதனை ஓட்டம் மற்றும் ரயில் இயக்கம் தொடர்பான பணிகளுக்கு பயிற்சிஅளித்தல் ஆகிய வேலைகள் செய்து கொடுக்கும்.

இந்த நிறுவனத்தின் கிளை பிரேசில் நாட்டில் உள்ளது. அங்குதான் சென்னை மெட்ரோ ரயிலுக்கான பெட்டிகள் தயாராகின்றன.

### அடுத்த ஆண்டு முடியும்

கோயம்பேடு - பரங்கிமலை இடையே மெட்ரோ ரயில் பாதை பணிகள் அடுத்தாண்டு ஜூன் மாதத்திற்குள்ளாக முடித்துவிட துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்பாக பிரேசிலிருந்து ரயில் பெட்டிகளை சென்னைக்கு கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும் டிசம்பர் மாதத்திலிருந்து சென்னைக்கு பெட்டிகள் வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரிகள் கூறினர்.

மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் எதிர்பார்த்ததைவிட விரைவாகவே நடந்து வருகிறது. இத்திட்டத்தில் 24 கி.மீ., துாரம் சுரங்கபாதை அமைக்கும் பணி, வரும் மார்ச் மாதம் இறுதியில் அல்லது ஏப்ரல் மாதம் துவங்கப்பட உள்ளது.

திட்டத்திற்கான 168 பெட்டிகளில், முதல் கட்டமாக 60 சதவீதம் பெட்டிகள் இவ்வாண்டு டிசம்பர் மாதம் துவங்கி வரும், 2013ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் சென்னை வந்து சேரும். மற்ற பெட்டிகள் 2014ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் வந்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதற்காக கோயம்பேடு யார்டு டிராக் பணிகள் மற்றும் டெஸ்ட் டிராக் பணிகள், வரும் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் முடிந்தால், வரும் 2013 ஆண்டு டிசம்பர் அல்லது 2014ம் ஆண்டு ஜனவரி மாதம் கோயம்பேடு - பரங்கிமலை இடையே மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்கப்படும்.

மெட்ரோ ரயில் திட்டத்தில் மொத்த துாரமான 45 கி.மீ., துாரமும் பாதைப் பணி முடிவடைந்து, திட்டமிட்டபடி முழு அளவில் ரயில்கள் இயக்கப்பட்டால், இந்த தடத்தில் தினசரி 5 லட்சம் பேர் வரை பயணம் செய்யலாம்.

இவ்வாறு அதிகாரி தெரிவித்தார்.

### மூன்று நிமிட இடைவெளியில்...

மெட்ரோ ரயில் திட்டத்தில் முதலில் நான்கு பெட்டிகள் இணைக்கப்பட்ட ரயில்கள் இயக்கப்படும். ஒரு ரயிலில் 1,276 பேர் வரை பயணம் செய்யலாம்.

இந்த ரயில் போக்குவரத்து துவங்கப்பட்ட பிறகு, பயணிகள் போக்குவரத்தையொட்டி ஆறு பெட்டிகள் இணைக்கப்பட்ட ரயில்களும் இயக்கும் திட்டம் உள்ளது. ரயில் பெட்டிகள் குளிர்சாதன வசதியுள்ளவை.

சொகுசான நவீன இருக்கைகள், தானியங்கி கதவுகள், ரயில் நிலையங்கள் பற்றி தானியங்கி அறிவிப்பு அமைப்பு, தானியங்கி இயந்திரம் மூலம் பயணச்சீட்டு வசதி போன்றவை இடம்பெற்றிருக்கும்.

மூன்று நிமிட இடைவெளியில் ரயில்கள் தொடர்ந்து இயக்கவும் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். மெட்ரோ ரயில் மணிக்கு 80 கி.மீ., வேகத்தில் இயங்கக் கூடியது.



ரயிலின் வெளிப்புற மற்றும் உள்புற மாதிரிப்படம்

### பயணக் கட்டணம்

| துாரம் கி.மீ., வரை | கட்டணம் ரூபாயில் |
|---|---|
| 2 | 8 |
| 4 | 10 |
| 6 | 11 |
| 9 | 14 |
| 12 | 15 |
| 15 | 17 |
| 18 | 18 |
| 21 | 19 |
| 24 | 20 |
| 27 | 22 |

27 கி.மீ.,க்கு பிறகு 23 ரூபாய்